தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 331/ந/2023
நாள் 29.11.2023

திரு. அ. ராமசுப்பிரமணியன்,
செங்கோட்டை,
தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
செங்கோட்டை நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தென்காசி மாவட்டம், செங்கோட்டை, SRK தெரு, எண்.5/9A என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. ராமசுப்பிரமணியன் என்பவரின் 24.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.10.2023 அன்று பெறப்பட்டு 331/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், செங்கோட்டை, SRK தெரு, எண்.5/9A என்ற முகவரியில் வசிக்கும் திரு. அ. ராமசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"செங்கோட்டை கிராமம், SRK தெருவில் புல எண்.99 எங்கள் குடியிருப்பு மனையாகும். அதை சார்ந்த புல எண்.100 எங்களது தனித்த தென்வடல் நடைபாதையாகும். அந்த பாதை எங்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த பாதையை ஒட்டி வாணியர் சமுதாய நலக்கூடம் என்ற பெயரில் இரண்டு அடுக்கு திருமண மண்டபம் ஒன்றினை வாணியர் சமுதாய பிரமுகர்கள் சிலர் கட்டி வருகிறார்கள். அந்த கட்டுமானத்துக்கு எவ்வித நகராட்சி அப்ரூவல் பெறாமலும், மேற்படி கட்டடத்தின் side set back, Front set back, Rear set back, எதுவுமின்றி முறையான கழிவறை வசதியின்றியும், parking வசதியின்றியும், அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எதுவுமின்றியும் குடியிருப்பு பகுதிகளில் ஆபத்தான முறையில் சமையல் அறையை பயன்படுத்தும் விதமாக, வணிக மற்றும் லாபத்தை அடிப்படையாகக் கொண்டே எந்தவித

முன்அறிவிப்புமின்றி கட்டப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பாதையில் ஆக்கிரமித்துக் கொண்டு இடையூறு செய்து வருகிறார்கள் என்பதை செங்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

நான் கடந்த 20.05.2023 அன்று செங்கோட்டை நகராட்சி அதிகாரத்திற்குட்பட்ட SRK தெருவில் புல எண்.100—ல் நாங்கள் பயன்படுத்தி வரும் தென்வடல் தனித்த நடைபாதையை ஆக்கிரமித்து அதன் அருகில் சமுதாய நலக்கூடம் ஒன்றினை பல விதிமீறல்களின் மூலம் கட்டி வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்த வேண்டியும், முறையற்ற முறையில் விதிமீறலின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டடப் பகுதியை மேலும் கட்டாமல் நிறுத்தி வைக்கவும் கேட்டு புகார் மனு ஒன்றினை செங்கோட்டை நகராட்சியில் கொடுத்திருந்தேன். அந்த மனுவிற்கு கடந்த 20.07.2023 ஆம் தேதியன்று நகராட்சியினர் தமிழ்நாடு நகராட்சி நகர்புறச் சட்டம் 1920 பிரிவு 216 (1) (2)—ன் கீழ் அனுமதியற்ற கட்டடத்திற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பதில் கூறியுள்ளார்கள். அவ்வாறு அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்பும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இதுவரை தெரியவில்லை.

எங்களுக்கு பாத்தியப்பட்ட நடைபாதைக்கு இடையூறாக எதிர்மனுதாரர்கள் வாணியர் சமுதாய நலக்கூடம் என்ற பெயரில் உள்ள திருமண மண்டபத்தின் கீழ் புறசுவரின் வடபாகத்தில் ஒரு வாசலை வைத்து கட்டியுள்ளார்கள். வாணியர் சமுதாய மண்டப நிர்வாகிகள், பொதுமக்களை தூண்டி எங்களது நடைபாதையை ஆக்கிரமிக்கவும், இலைதழைகளை போட்டும், வாகனங்களை குறுக்கே நிறுத்தியும், சுகாதார கேட்டினை ஏற்படுத்த விழைந்துள்ளார்கள். எவ்விதமான நகராட்சி அப்ரூவலும் இதுநாள் வரை பெறாமல் கட்டியுள்ள கட்டுமானத்தை அகற்ற செங்கோட்டை நகராட்சி எவ்விதமான சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வாணியர் சமுதாய நலக்கூடம் என்ற பெயரில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்தினை, தொடர்ச்சியாக அதன் நிர்வாகிகள் தற்போதும் கட்டி வருகிறார்கள். அதேபோல எங்களது நியாயமான தொடர் கோரிக்கைகளையும் செங்கோட்டை நகராட்சினர் பரிசீலிக்காமலும், கண்டுகொள்ளாமலும், களஆய்வு செய்யாமலும் இருந்து வருகிறார்கள். அதனால் வாணியர் சமுதாய மண்டப நிர்வாகிகள், நகராட்சி சட்ட விதிகளையும் கண்டுக் கொள்ளாமல் கட்டடம் கட்ட முயற்சித்து வருகிறார்கள்.

எங்களது தனித்த நடைபாதை சிலரால் ஆக்கிரமிக்கப்படவும், சேதப்படுத்தப்படவும், சுகாதார சீர்கேட்டிற்கு உள்ளாக்கப்படவும், அதன்பொருட்டு வாய் சண்டை சச்சரவுகள் ஏற்படவும், போலிஸிக்கு புகார்கள் செல்லவும் வாய்ப்புள்ளது. அதனால் எங்களுக்கு உடல்நிலையும், மனநிலையும் சீர்கேடு அடையவும் வழி உள்ளது.

தாங்கள் விரைவாகவும், சட்டப்பூர்வமாகவும் செயல்பட வேண்டியும் எனது தனித்த நடைபாதை சுவாதீனத்துக்கு எவ்வித இடையூறும், தடைகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக எனது தந்தை நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை கோர்ட்டில் O.S.No.51/2023 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் இருந்து வருகிறது. வாதியாக எனது

தந்தை திரு.மு.அருணாச்சலம், பிரதிவாதியாக வாணிய சமுதாய பிரமுகர்கள் மட்டும் சேர்க்கப்பட்டது. அந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக அப்போது பொறுப்பிலிருந்த நபர்களுக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டு அவர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டார்கள். ஆனாலும் நகராட்சி ஆணையர் அவர்கள் இதனை கண்டுகொள்ளாமலும், களஆய்வு செய்யாமலும், ஆக்கிரமிப்புக்களை அகற்றாமலும், பலமுறை மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நகராட்சி ஆணையர், நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையின் பேரில் அவர்களை நீதிமன்ற வழக்கில் சேர்க்கவில்லை. இருந்தபோதிலும் எதிர்மனுதாரர்களாக உள்ள மண்டப பிரமுகர்கள் வேண்டுமென்றே கட்டடப் பணிகளை செய்து வருகிறார்கள். அசல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்ற போதிலும் நீதிமன்றத்தினையும் மதிக்காமல், செங்கோட்டை நகராட்சி ந.க. எண்.22/2022/H1, 27.07.23 தேதியிட்ட அறிவிப்பையும் பொருட்படுத்தாமல் கட்டடம் கட்ட முயற்சித்து வருகிறார்கள். மண்டப பிரமுகர் திரு. மோகன்ராஜ் என்பவரின் வீட்டிலிருந்து மின் இணைப்பு திருட்டுத்தனமாக கொடுத்து வேலையை தொடர்ச்சியாக செய்து வந்துள்ளார்கள். நான் இது குறித்து புகார் கொடுத்துள்ளேன்.

ஆகவே, நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மையானவை மற்றும் இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை நான் உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தாங்கள் செங்கோட்டை நகராட்சி ஆணையருக்கு அனுமதியின்றியும், முறையில்லாமலும் கட்டப்பட்ட கட்டடத்தின் முன்கூரையை அகற்றவும், தனிநபர் பாதையான எனது தந்தையின் பாதையை ஆக்கிரமிப்பதை தடுக்கவும், முறையான அனுமதி பெற்று கட்டடம் கட்டுவதற்கும் இந்த மன்றத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் செங்கோட்டை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் தனது 09.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

''செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, எஸ்.ஆர்.கே. தெருவில் கதவு எண்.7/4 ஊர் பொதுவகை சார்பில் திரு.மோகன்ராஜ் என்பவர் பொறுப்பாளர் நிலையில் அனுமதியற்ற வகையில் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதை முன்னிட்டு, செங்கோட்டை நகராட்சியால் அனுமதியற்ற வகையில் கட்டுமானப்பணிகள் நடைபெறுகின்றது; அதனை உடனே நிறுத்திடுமாறு தெரிவித்து செங்கோட்டை நகராட்சி அலுவலக அறிவிப்பு ந.க. அ.இ.க.எண்.06/2023 ந.ஆ நாள் 15.05.2023—ன்படி அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. அ. ராமசுப்பிரமணியன் த/பெ. அருணாச்சலம், எஸ்.ஆர்.கே. தெரு, செங்கோட்டை என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் 5578363 நாள் 16.06.2023, மனு எண்.5876735 நாள் 18.07.2023 மற்றும் மனு எண். 5876735 நாள் 01.11.2023 ஆகிய தேதிகளில் அளித்துள்ள புகார் மனுவிற்கும் செங்கோட்டை நகராட்சி மூலமாக உரிய பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டை நகராட்சியால் எஸ்.ஆர்.கே. தெருவில் கதவு எண்.7/4 ஊர் பொதுவகை சார்பில் அனுமதியற்ற வகையில் கட்டப்பட்டுவரும் கட்டட கட்டுமானப்பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன் 30.06.2023 அன்று ஊர் பொதுவகை சார்பில் இணையதளம் வழியாக கட்டட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் வரப்பெற்று அவை ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019–ல் விதி எண்.32–க்கு முரணாக உள்ளது என்பதால் கட்டட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கதவு எண்.7/4 எஸ்.ஆர்.கே தெருவில் ஊர் பொதுவகை சார்பில் கட்டியுள்ள கட்டடத்தின் மீது 10.10.2023 அன்று அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.22, எஸ்.ஆர்.கே. தெருவில் கதவு எண்.7/4 ஊர் பொதுவகை சார்பில் கட்டிய கட்டடத்திற்கு அறிவிப்பு எண்.01/23–24/எப்1, நாள் 03.11.2023 அன்று உப பிரிவு 56 மற்றும் 57 தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி மேற்படி கட்டட கட்டுமானப்பணிகள் அனுமதியற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக நகராட்சி சார்பில் அலுவலகத்தினை பூட்டி சீல்வைப்பதற்கான அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகின்றது.

மனுதாரர் திரு. ராமசுப்பிரமணியன் என்பவர் செங்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் தனிநபர் நடைபாதை தொடர்பான வழக்கு எண்.51/2023 நகராட்சிக்கு தொடர்புடையது அல்ல என்பதுடன் திரு.அருணாச்சலம் மற்றும் ஊர் பொதுவகை வாணிய சமுதாய பிரமுகர்களை மட்டுமே வாதி பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு நடைபெறுகின்றது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி எந்த வகையிலும் நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை. எஸ்.ஆர்.கே.தெருவில் கதவு எண்.7/4–ல் கட்டுமானப்பணிகள் எதுவும் நடைபெறாத வகையில் செங்கோட்டை நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அவை நடவடிக்கையில் இருந்து வருகின்றது என்ற விபரம் மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் செங்கோட்டை நகராட்சி ஆணையரும் 09.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. அ. ராமசுப்பிரமணியன் 09.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''செங்கோட்டை கிராமம், SRK தெருவில் புல எண்.99 எங்கள் குடியிருப்பு மனையாகும். அதை சார்ந்த புல எண்.100ல் உள்ள பாதை எங்களுக்கு சொந்தமானது. மேற்கண்ட பாதையை ஒட்டி சமுதாய நலக்கூடம் என்ற பெயரில் இரண்டு மாடிகள் கொண்ட திருமண மண்டபத்தை அங்குள்ள பிரமுகர்கள் சிலர் கட்டி வருகிறார்கள். அந்த கட்டுமானத்துக்கு எவ்வித கட்டட அனுமதியும் இல்லை. அதேபோன்று விதிகளின்படி Side set back எதுவுமின்றியும், முறையான கழிவறை வசதியின்றியும் குடியிருப்பு பகுதிகளில் ஆபத்தான முறையில் சமையல் அறையை பயன்படுத்தும் விதமாகவும், வணிக மற்றும் லாபத்தை அடிப்படையாகக் கொண்டும் மேற்கண்ட இரண்டு மாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதையை ஆக்கிரமித்து எங்களுக்கு இடையூறு செய்து

வருகிறார்கள். எனவே, அனுமதியின்றியும், முறையில்லாமலும் கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றவும், தனிநபர் பாதையான எங்களுக்கு சொந்தமான பாதை ஆக்கிரமிப்பை தடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான செங்கோட்டை நகராட்சி ஆணையருக்கு பதிலாக செங்கோட்டை நகராட்சியில் மேலாளராகப் பணியாற்றும் திரு.நா.கண்ணன் மற்றும் நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றும் திருமதி. க.காளீஸ்வரி ஆகியோர் 09.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"செங்கோட்டை நகராட்சி எஸ் ஆர் கே தெரு கதவு எண் 7/4ல் அனுமதியற்ற வகையில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும், 30.6.2023 அன்று இணையதளம் வழியாக கட்டட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் பெறப்பட்டு ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019ல் விதி எண் 32க்கு முரணாக உள்ளது என்பதால் கட்டட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதியற்ற மேற்கண்ட கட்டடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் உப பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் 3.11.2023 அன்று பூட்டி சீல் வைப்பதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து அதன் தொடர் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, செங்கோட்டை நகராட்சி ஆணையரின் 7.11.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

**(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், செங்கோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி மேலாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

தென்காசி மாவட்டம், செங்கோட்டையைச் சேர்ந்த மனுதாரர் திரு. அ. ராமசுப்பிரமணியன் என்பவர் தனது 24.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, எஸ்.ஆர்.கே தெருவில் ஊர் பொதுவகை சார்பில் திரு. மோகன்ராஜ் என்பவர் நகராட்சியின் அனுமதியின்றி 2 மாடிக் கட்டடம் கொண்ட வாணியர் சமுதாய நலக்கூடத்தை விதிமீறி கட்டி வருவதாகவும், தனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பாதையில் ஆக்கிரமித்து இடையூறு செய்வதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அனுமதியற்ற கட்டுமான கட்டடத்திற்கு செங்கோட்டை நகராட்சி மூலம் கட்டுமானப் பணிகளை நிறுத்துவதற்கான 15.05.2023 நாளிட்ட அறிவிப்பு, கட்டடப்பணி மேற்கொண்ட திரு. மோகன்ராஜ் என்பவருக்கு அனுப்பப்பட்டு அதனைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள அனுமதிகோரி 30.06.2023 அன்று இணையதளத்தில் வரப்பெற்ற விண்ணப்பத்திற்கும் நகராட்சியினரால் 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் மனுதாரருக்கும் நகராட்சியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் விதிமீறி, அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தினை பூட்டி சீல் வைப்பதற்கான 03.11.2023 நாளிட்ட அறிவிப்பும் நகராட்சியினரால் சார்பு செய்யப்பட்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.07 நாள் 10.01.2023–ல் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 80 (A)–ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீதான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு செங்கோட்டை நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இதில் எவ்வித தாமதமும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் இதை உறுதிப்படுத்தவும், செங்கோட்டை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரை அறிவுத்தி உறுதிப்படுத்த ஆணையிடப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.அ.ராமசுப்பிரமணியன்,
நெ.5/9, எஸ்.ஆர்.கே. தெரு,
செங்கோட்டை– 627 809, தென்காசி மாவட்டம்.

2) ஆணையாளர், செங்கோட்டை நகராட்சி,
தென்காசி மாவட்டம் – 627 809.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

5) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

சென்னை–600 032

29/11/23